


# அல்-குர்ஆனின் தீர்க்கமான அறைகூவல்

(AL-QUR'AN THE ULTIMATE CHALLANGE)


எம். ஐ. முஹம்மத் மீராலெவ்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"AL - QUR'AN THE ULTIMATE CHALLANGE"

# அல் - குர்ஆனின் தீர்க்கமான அறைகூவல்



நூலாசிரியர் :

**அஹ்மத் தீதாத் அவர்கள்**


வெளியீடு :

M / S. மாலிக் நியூஸ் ஏஜென்ஸி,

P. O. BOX 5449,

துபாய், U. A. E.


ஆங்கில மூலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்து வழங்குபவர்:

**எம். ஐ. முஹம்மத் மீராலெவ்வை**

(ஓய்வுபெற்ற ஆங்கில பி. க. அ.)

சாய்ந்தமருது,

இலங்கை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம் :

| | |
|---|---|
| நூற் பெயர் | : அல்-குர்ஆனின் தீர்க்கமான அறைகூவல் |
| நூலாசிரியர் | : அஹ்மத் தீதாத் |
| மொழிபெயர்ப்பு | : எம். ஐ. முஹம்மத் மீராலெவ்வை |
| பதிப்புரிமை © | : ஆசிரியர் |
| முகவரி | : ஆஸ்பத்திரி வீதி, சாய்ந்தமருது, இலங்கை. |
| பக்கங்கள் | : 36 |
| பிரதிகள் | : 1000 |
| அச்சு | : ஸ்டார் ஓப்செற் பிரிண்டர்ஸ் பிரதான சாலை, சாய்ந்தமருது. |
| முதற் பதிப்பு | : ஜூன் 1999 |
| விலை | : ரூபா 30/= |

## BIBIOGRAPHICAL DATA :

| | |
|---|---|
| Title | : "AL - QUR'AN THE ULTIMATE CHALLANGE" |
| Author | : Ahamed Dheedhath |
| Translater | : M. I. Mohamed Meeralebbe |
| Copyright © | : Author |
| Address | : Hospital Road, Sainthamaruthu, Sri Lanka |
| Pages | : 36 |
| Copies | : 1000 |
| Printers | : Star Offset Printers Main Street, Sainthamaruthu. |
| 1st Edition | : June 1999 |
| Price | : Rs. 30/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி பெயர்ப்பாளரின் முன்னுரை

பேரறிஞர் அன்பர் **அஹ்மத் தீதாத்** அவர்களின் அல்-குர்ஆன் பற்றிய அபூர்வ சிறுநூலால் பெரிதும் யான், கவரப்பட்டு, ஆங்கில மொழி அறிவும் பரிச்சயமுமில்லாது, தமிழ் மொழியில் பெரிதும் தங்கி வாழும் மக்களுக்குப் பயனளிக்கக் கூடியவாறு, அந்நூலை மொழி பெயர்ந்துள்ளேன். நூலின் தலையங்கம் "**அற்புதம்**" என்றிருப்பதே போன்று, அந்நூலை தமிழில் மொழி பெயர்த்தலும் ஒரு சவாலாகவேயுள்ளது. இந்நூலில் மேற்கோள் களாகக் கையாளப்பட்டிருக்கும் அல்-குர்ஆன், பிபிலிய நூல் வாக்கியங்களை, அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்புக்களைத் தழுவியே தமிழில் தந்துள்ளேன்.

நூலாசிரியரின் கருத்துக்களை அவர் கையாளும் பாணியைத் தழுவி, தமிழ் வழக்காற்றுக்கேற்ப, தமிழில் தர முயற்சித்துள்ளேன். முஸ்லிமல்லாத தமிழ் வாசகர்களினதும், இளம் வாசகர்களினதும் நலனைக் கருத்திற்கொண்டு, இஸ்லாமியக் கலாச்சாரச் சொற்களையும் மேலதிக விபரங் களையும் பெருமளவில் தவிர்த்துக்கொண்டுள்ளேன்.

இம்மொழி பெயர்ப்பைப் பார்வையிட்டு, அன்புடன் ஒரு அணிந்துரையை நல்கி உதவிய பேரறிஞர் அல்-ஹாஜ். மௌலவி எஸ். எச். ஆதம்பாவா, B. A. (மதனி) M. A. (பேராதெனியா), (அதிபர், நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரி) அவர்கட்கும், இச்சிறுநூல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவருவதற்கு பலவாறாகவும் உதவிய அன்பர்கள் அனைவருக்கும், என்மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இந்த நற்பணிக்காக உதவிய அன்பர்கள் யாவருக்கும் கருணைமிகு இறைவன், நல்லருள் பாலிப்பானாக!

இங்ஙனம்,

**எம். ஐ. முஹம்மத் மீராலெவ்வை**

சாய்ந்தமருது,
இலங்கை.
20 - 04 - 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

உலக மாந்தர்க்கு அல்லாஹ்வால் அருளப்பட்ட மாபெரும் அற்புதம் அல்-குர்ஆன் ஆகும். இவ்வற்புதம் கால ஓட்டத்தின் அறிவு வளர்ச்சிக்கேற்ப விரிவடைந்து செல்கின்றது. இந்த அற்புதத்தின் பல்வேறு நிலைகளை மிகத் தெளிவாக எடுத்து விளக்குகின்றார். **"AL - QURAN THE ULTIMATE CHALLENGE"** என்ற நூலில், இன்று தென்னாபிரிக்காவில் வாழ்ந்து கொண்டிருக்கும் புகழ்பெற்ற இஸ்லாமியப் பிரச்சாரகர் ***அகமட் தீதாத*** அவர்கள்.

இந்தியாவின் சூறத் மாவட்டத்தில் 1918ம் ஆண்டு பிறந்த ***அகமது ஹுசைன் தீதாத்*** அவர்கள் தன் தந்தை தொழிற் செய்துகொண்டிருந்த தென்னாபிரிக்காவுக்கு 1927இல் சென்று, அங்கேயே குடியேறி வாழ்ந்து வருகிறார். உயர்கல்வியைப் பெறுகின்ற சந்தர்ப்பம் கிடைக்கப் பெறாதபோதும், இஸ்லாமிய தஃவாப் பணியில் இவர் மாமேதையாகத் திகழ்கின்றார். பைபிளையும் அல்-குர்ஆனையும் ஒப்பு நோக்கி இவர் எழுதியுள்ள நூல்கள், ஆற்றியுள்ள பிரசங்கங்கள், இவர் கண்டுள்ள விவாத மேடைகள் கொஞ்ச நஞ்சமல்ல. இம்மாபெரும் அறிஞரின் **"AL - QURAN THE ULTIMATE CHALLENGE"** என்ற நூலை மிகவும் தெளிவான தமிழில் தந்துள்ளார், ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமை வாய்ந்த முன்னாள் ஆங்கில பிரதம கல்வி அதிகாரியும், இன்றைய சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசலின் பிரதம நம்பிக்கையாளருமான அல்-ஹாஜ். எம். ஐ. எம். மீராலெப்பை அவர்கள் அல்-குர்ஆனுக்கு அரும் பணிபுரிவதை பெரும்பேறாகக் கருதும் மதிப்பிற்குரிய அல்-ஹாஜ். எம். ஐ. எம். மீராலெப்பை அவர்கள், அல்-குர்ஆன் நவீன யுகத்துக்கு விடுக்கும் சவாலையும் விரிந்து செல்லும் அறிவுலகிற்கு விண்மீனாக அது காட்டும் வழியையும், தமிழ் கூறும் நல்லுலகு அறிந்து பயன்பெற வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு, இந்நூலை மொழி பெயர்த்துள்ளார். "***அறிவும் உணர்வும்***" என்ற நூலின் மூலம் அல்-குர்ஆன் மீதான தன் வாஞ்சையை வெளிப்படுத்திய பெரியார் அவர்கள், தமது உடல் நிலையை கவனத்திற்கொள்ளாது, தீனுக்குச் செய்யும் பெரும் பணியாக ஆங்கிலத்தில் வெளியான நூல்களில் அவசியம் எனக் காணுபவற்றை தமிழில் மொழி பெயர்க்கும் உயர் பணியில் ஈடுபட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அல்-குர்ஆனின் சிறு வசனத்தைப் போன்றாவது ஒன்றை இயற்றுங்கள்" என்று அல்-குர்ஆன் மனித சமுதாயத்தை நோக்கி விடுக்கும் சவால் 1400 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் உள்ளது. நபி (ஸல்) அவர்களது காலம், இலக்கியத்தில் அரபிகள் மேம்பட்டிருந்த காலம் அல்-குர்ஆனின் இலக்கியத்தின் முன்னால் அவர்கள் நின்று பிடிக்க முடியவில்லை. 'இதன் முன் நிற்க முடியாது' என அவர்கள் பின்வாங்கினர். அன்று இலக்கியம் அற்புதம் எனக் கருதப்பட்டது.

அண்மைக்கால அறிவியல் உலகு கண்டு பிடிக்கும் நவீன கண்டுபிடிப்புக்களெல்லாம், அல்-குர்ஆனில் 1400 ஆண்டுகளுக்கு முன்பே இடம் பெற்றிருப்பது தான், இன்றைய விஞ்ஞானிகளின் பணியை புதுமையற்றதாக்கி நிற்கிறது.

எதிர் காலம் கம்பியூட்டர் யுகம்! அதனையே முறியடிக்கும் மாபெரும் உள்ளடக்கத்தை அல்-குர்ஆன் கொண்டிருப்பது, அதன் அற்புதத்தன்மையை உலகம் உணரச் செய்யும். இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும் எவ்வாறான கண்டு பிடிப்புகள் அக்காலங்களில் கண்டு பிடித்து வியக்கப்பட்டாலும், அதனை விஞ்சும் அற்புதமாக 'இன்ஷா அல்லாஹ்' அல்-குர்ஆன் திகழப்போகிறது. இவற்றையெல்லாம் **அறிஞர் அகமட் தீதாத்** அவர்கள், இந்நூலில் மிகத் தெளிவாக விளக்குகின்றார்.

அல்-குர்ஆனின் மாண்புகளை இன்னமும் உணராமல் முஸ்லிம் சமுதாயம் வழிதவறிச் சென்று கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்தி சீர்திருத்தத்தின்பால் அவர்களைச் செலுத்த உதவும் எனும் நோக்கில், இந்நூல் எழுதப்பட்டதாக நூலாசிரியர் குறிப்பிடுவது இங்கு கவனிக்கத்தக்கது.

இந்நூல் இந்நோக்கத்தை நிறைவேற்றும் என்பதில் சந்தேகமே இல்லை. அல்-குர்ஆன் காலத்தால் அழியாத அற்புதம். "அதில் சந்தேகமே கிடையாது; தக்வாவுடைய மக்களுக்கு அது நேர் வழிகாட்டக்கூடியது." "என்று அல்-குர்ஆனின் வழி காட்டுதலுக்கேற்ப தமது வாழ்வை அமைத்துக்கொள்ள முஸ்லிம் சமுதாயம் என்று முன்வருமோ, அன்றே, அவர்கள் ஈருலகிலும் எஜமானர்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் கூறும் நல்லுலகிற்கு நல்ல தரமான ஒரு நூலைத் தந்துள்ள அறிஞர், அல்-ஹாஜ். எம். ஐ. எம். மீராலெப்பை அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்களின் இத்தூய பணி தொடர எல்லாம் வல்ல இறைவன் நீடித்த ஆயுளையும் நிறைந்த செல்வமான சுக வாழ்வையும் அன்னவருக்கு வழங்க அவனைப் பிரார்த்திப் போமாக! (எல்லாப் புகழும் ஏகவல்ல அவனுக்கே உரியன)

இ∴து,

**மௌலவி. எஸ். எச். ஆதம்பாவா** எம். ஏ. (மதனி)
தலைவர், அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா
அதிபர், காஷிபுல் உலூம் அறபுக்கல்லூரி, நிந்தவூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூல நூலுக்கு அளிக்கப்பட்ட முகவுரை

"(நபியே!) உறுதியாகச் சொல்வீராக! மனித இனத்தவரும், ஜின் இனத்தவரும் ஒன்று சேர்ந்து, ஒரு பிரிவினருக்கு மற்றைய பிரிவினர் துணையாயிருந்து முயற்சித்த போதிலும், அவர்களால் அது போன்ற ஒரு குர்ஆனை உண்டாக்குவதற்கு முடியாது" (அல்-குர்ஆன், 17 : 88). இந்த 14 நூற்றாண்டைய அறைகூவல், இன்னும், மனித இனத்தார் மத்தியில், நிறைவேற்றப்படாத ஒன்றாகவே இருந்து வருகின்றது.

சமீபகால விஞ்ஞானவியல் கண்டுபிடிப்புகளில், கணிசமான நவீன மாற்றங்களை ஏற்படுத்தி தற்கால வாழ்க்கையிலும் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தி யதற்குக் காரணமாயுள்ளது 'கொம்பியூட்டர்' என அழைக்கப்படும் கணக்கியல் சாதனமாகும். அந்த நவீன சாதனத்தைப் பயன்படுத்தி, **கலாநிதி றஷாத் கலீபா** அவர்கள், மேற்படி அறைகூவலை, மதிநுட்பமும், மஹாத்மியமுடைய மனித சக்தியால் தானும், அல்-குர்ஆனின் சின்னஞ்சிறு பகுதியையேனும் ஆக்குவதற்கு திட்டவட்டமாக முடியவே முடியாதென்பதை நிருபிக்கும் முயற்சியிலீடுபட்டிருக்கின்றார்.

அல்-குர்ஆன், அதன் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை, ஒரு வியத்தகு முறையில், முற்றும் ஒழுங்குற ஒன்றிணைக்கப்பட்ட தாயிருப்பதையும், 'கொம்பியூட்டர்' என்னும் நவீன உலகச்சாதன கிரியா முறையில் அற்புதமாயமைந்து இயங்குவதாயுமிருக்கின்றது. (அல்-குர்ஆன், 74 : 30) "அதன் மேல் உள்ளது பத்தொன்பது ஆகும்." கலாநிதி. றஷாத் கலிபா அவர்களின் முயற்சி இந்த குர்ஆனிய சிறுவசனத்திற்கு ஒரு புதிய நெறிநிலை யையும், கருத்தாழத்தையும் வழங்குகின்றது.

'கொம்பியூட்டர்' எனும் நவீன சாதனத்தால் மனிதன் கண்டனு பவித்திராத அற்புதங்களையும், அதிசயங்களையும், இயக்கிக்காட்டவல்ல யுகத்தில், நாம் வாழ்ந்து கொண்டிருக் கின்றோம். அதே இயந்திர சாதனத்தைப் பயன்படுத்தி, "அல்-குர்ஆன், மனித முயற்சி அத்தனைக்கும் முற்றிலும் அரிதானதும், அப்பாற்பட்டதுமாகும்" என்னும் நிருபணத்திற்கு, போதிய சான்றுகளை இச்சிறுநூல் கொண்டுள்ளது. அல் - குர்ஆன், அகில உலக மாந்தர்கள், உலகியல் உண்மை களை அறிந்துணர்ந்து, அதற்கேற்ப நெறிதவறாது வாழ வழிகாட்டுவதற்காக, எல்லாம் அறிந்த, எல்லாம் வல்ல நித்திய ஏக இறைவனால் திட்பமாக நீதி நெறி நிரம்பிய ஆதாரபூர்வ இறுதி இறை வேதமாய் அருளப்பட்டதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாம். அல்-குர்ஆனின் ஆய்வு முயற்சி வியாபகமாகி புதிய புதிய ஆழங்களுக்குச் செல்லச் செல்ல, அளவிலா அற்புதங்களும், இரகசிய உண்மைகளும், மென்மேலும் வெளிவருவதை எதிர்பார்க்கலாம். இச்சிறுநூல், தற்கால, எதிர்கால, மதியூகிகள், மாமேதைகள், சிந்தனையாளர்கள் ஆகியோர்கள் மத்தியில், மிகச் செல்வாக்குப் பெற்று, அவர்களின் ஈடுபாட்டை ஊக்கிவிடக் கூடியதாயுள்ளது. மேலும், இந்நூல், உலகின் பல்கோடி முஸ்லிம் மக்கள், அல்-குர்ஆனின் ஒளிமிக்க கருத்துக்களின் அடிப்படையில் உயர்கருத்துக்களை அறிந்துணர்ந்து, அவற்றிற்கேற்ப தம் வாழ்க்கை நெறிகளை சிறப்புற மேற்கொண்டு வாழ ஊக்கி விடக்கூடியதாயமையலாம். எம்மைத் திணற வைக்கும் கொம்பியூட்டர் முடிவுகள், நிருபணங்களாகப் பெறப்பட்ட வைகளாகும்.

இந்த அற்புதமான அறிவியல் நூலை, யான் சகல வேதங்களையும் பின்பற்றி வாழும் இளம் சந்ததியினர் களுக்கு, பெரிதும் விரும்பி அர்ப்பணிக்கின்றேன். இது தொடர்பாக தற்காலத்தில், இஸ்லாமிய அடிப்படையிலிருந்து தவறி, நழுவிச்சென்று கொண்டிருக்கும் ஒரு சிறு விகித முஸ்லிம் இளைஞர்களின் செயலைப்பற்றி, என்னால் இங்கு, குறிப்பிடாதிருக்க முடியவில்லை. அவர்கள் தங்களின் 'அடிப்படை உளக்கவிவுகள்' எனும் மனவிருப்புக்களை அமைத்துக் கொள்வதில், முற்றும் பிழையாக நடந்து கொள்கின்றார்கள். அவர்கள், பிளவுபட்ட கலாச்சாரத்திற்குப் பலியானவர்களாய்த்தென்படுகின்றனர். கற்றலில் ஈடுபாடுள்ள அவ்விளைஞர்கள், தம்கற்றல் துறைகளில் சக்திமிகு இயல்பூக்கங்களையும், ஆற்றல்களையுமுடையோராயுள்ளா ரெனினும், தம்சொந்த மார்க்கமான இஸ்லாத்தின் ஒளிமிக்க நீதிநெறிகள் சம்பந்தப்பட்டவரை, எந்தச்சிரத்தையுமில்லாத வர்களாயிருக்கின்றனர். இறைவனின் பேரருளால், அவர்கள் இந்நூல் தரும் தெளிவான விளக்கம் காரணமாக, தங்களின் தவறான கருத்துக்களிலிருந்தும், விளக்கயீனங்களிலிருந்தும் விடுபடுவார்களென நம்புகின்றேன்.

இறைவனின் இறுதிவேதமாகிய இஸ்லாம், உலகில் வாழும் சகல மாந்தர்களுக்கும் முற்றும் பொருத்தமானதா யுள்ளது. அல் - குர்ஆன் ஒவ்வொரு மனிதனின் ஆளுமை யையும் அபிவிருத்தி செய்து, பூரணப்படுத்தவல்லதாயுள்ளது. அல்-குர்ஆன் பற்றிய கொம்பியூட்டரின் திட்டவட்டமான கண்டு பிடிப்புக்களைக் கையில் வைத்துக்கொண்டு, அதுபற்றி, முஸ்லிம்கள் இரகசியமாய்ப் பேசவேண்டியதில்லை. இப்போது, நாம் மிகத் தைரியமாக, இஸ்லாமியப் பிரச்சாரத்தை வியாபகமாக மேற்கொள்ளலாம். எண் இயல் கண்டு பிடிப்புக்களை ஒருகையிலும், தர்க்க ரீதியாக நிரூபிக்கப் பட்டிருக்கும் உண்மைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுகையிலும் வைத்துக்கொண்டு. நாம். எநத அஞ்ஞானியையோ. நாஸ்திகரையோ. வேறுவகைக் காபிரையோ. இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய கைங்கரியத்திற்கு இலகுவில் உதவலாம்.

அல்-குர்ஆன். எல்லாம் வல்ல இறைவனின் புனித தெய்வீகத்தன்மை பொருந்தியதாயும். கருத்தாழம்மிக்க உண்மைகளை உள்ளடக்கியதாயுமிருப்பதுடன். அறிவியல் உலகின் நவீன எண்இயல் சாதனமான கொம்பியூட்டரால் தெளிவாக நிருபிக்கப்பட்ட. நிலையான அற்புதமுமாகும். அஃதை நீங்கள் அறியக்கூடியதாக இந்நூலில் உரிய விபரம் தரப்படுகின்றது. நவீன உலகின் கணக்கியல் சாதனமான கொம்பியூட்டரின் கண்டுபிடிப்புக்கள் திட்டவட்டமானதும். நிலையானதுமாகும் (அல்-ஹம்துலில்லாஹ்).

இந்நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கு, பல நண்பர்கள் பக்தி விசுவாசத்துடன் பல வழிகளிலும் மெச்சத் தக்க முறையில் உதவியிருக்கின்றார்கள். சமீபகாலம் வரை கர்நாடக அரசின் நிதி அமைச்சராயிருந்த, பிரபல்யம் வாய்ந்த தேசிய முஸ்லிம் தலைவர். ஜனாப். எஸ். எம். யஹ்யா அவர்கள், மிகுந்த மனவிருப்புடன் தன் நேரத்தை அர்ப்பணித்து, அருமையான ஆலோசனைகள் வழங்கி நல்வழிப்படுத்தி உதவியுள்ளார்கள். அன்னாருக்கு விசேடமாக, நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இறைநேசச் செல்வர்களி லொருவராகக் கணிக்கத்தக்க, ஹைதராபாத்தைச் சேர்ந்த கலாநிதி, பஷீர் அஹமத் ஷிறாஸி அவர்களுக்கு, அவர்களின் மூல தஸ்தாவேஜுகளைத் தந்துதவியமைக்காக எனது நன்றியைப் பதிவு செய்துகொள்ள விரும்புகின்றேன்.

மகா கருணையாளனான பேரருள் நிறை அல்லாஹ். தன் அடியார்கள் மேற்கொண்ட இச்சிறு கூட்டு முயற்சி வெற்றிபெற்று மிளிரவும், அஃதை நற்பணியாகவும் ஏற்று நல்லருள் புரிவானாக!

ஆமீன்.

**முஹம்மத் பர்ஹாத் கான்**

பங்களூர், இந்தியா.
சபர் 19, ஹிஜ்ரி 1401,
1980 டிசம்பர், 28.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

1. மொழி பெயர்ப்பாளரின் முன்னுரை.
2. நூலின் தமிழ் மொழிபெயர்ப்புக்கு அணிந்துரை.
3. மூல நூலின் அறிமுக உரை.
4. அல்-குர்ஆனின் தீர்க்கமான அறைகூவல்

A - பாகம் I
B - பாகம் II
C - பாகம் III
D - பாகம் IV
E - பாகம் V
F - பாகம் VI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "அடிப்படை உண்மை"

இவ்வகிலத்தைப் படைத்து இயக்கும் எல்லாம் வல்ல இறைவன், மனித இனத்தினருக்கு வகுத்த வாழ்க்கைத் திட்டத்திற்கும் சங்கற்பத்திற்குமேற்ப, அவர்களுக்கு வழிகாட்ட, காலத்துக்குக் காலம், சமூகத்துக்குச் சமூகம், தேர்ந்தெடுத்த மனிதப் புனிதர்களான இறைதூதர்களின் வாயிலாக, இறை மறைகளையும், இறைகட்டளைகளையும், அருள்செய்து கொண்டே வந்துள்ளான். மனித இனத்தாரிடையே இறைதூதர்கள் உலகில் தோன்றிய போதெல்லாம், மனிதர்கள் அவ்வேதங் களையும், வேதகட்டளைகளையும் உரியவாறு கணித்து ஏற்றுக்கொள்ளாது, அந்தந்த சமூகத்தவர்கள் சிந்தனையற்று, இடும்புத்தனமாக, இறைதூதர்கள், இயற்கைச் சக்திகளுக் கப்பால் சென்று, தங்களின் இறைதூதுவத்தை நிரூபிக்க வேண்டுமெனக்கேட்பது, குறிப்பாக அதிகாரவர்க்கத்தினரின் தொன்றுதொட்ட வழக்கமாகயிருந்து வந்துள்ளது.

உதாரணமாக, இற்றைக்கு சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு உலகில் தோன்றிய இயேசுநாதர் என அழைக்கப்படும் இறைதூதர் நபி ஈஸா (அலை) அவர்கள், அவர்களுக் கருளப்பட்ட இன்ஜீல் வேதநெறிகளுக்கேற்ப, அம்மக்களை அனாவசிய அனாச்சாரச் சடங்குகளிலிருந்தும், வழக்கங்களி லிருந்தும் மீட்சிபெற்று, சீர்திருந்தி வாழவேண்டிய அவசியத்திற்கு வழிப்படுத்திப் போதித்தார்கள். அவ்வாறு அவர்கள் போதித்த வேளை, பின்வரும் நிகழ்ச்சிகள் நடைபெற்றதாக பிபிலிய நூல், புனித மத்தியூ சுவிசேஷம் 12ஆம் அத்தியாயம் 38ஆம், 39ஆம் பிரிவுகள் பின்வருமாறு கூறுகின்றன: "இயேசு நாதரவர்கள், அம்மக்களால், சில குறிப்பிட்ட அற்புதங்களை நிறைவேற்றி, தன் அந்தஸ்தை நிரூபிக்க வேண்டுமென, வலியுறுத்திக் கேட்கப்பட்டார்கள்" என்றும், அவ்வேளையில், 'பாரிசு' என்னும் வைதீகயூதர்களும், சில எழுத்தாளர்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுநாதரை விழித்து. "ஐயாவே! உங்களிடம். உங்கள் அந்தஸ்தை நிரூபிக்கும் ஒரு அடையாளம் இருப்பதை நாங்கள் விரும்புகின்றோம்" என்றார்கள். அதற்கு விடையாக இயேசுநாதரவர்கள், "துன்மார்க்கர்களான களங்கமிகு சந்ததியினர்கள்தான் அடையாளத்தைத் தேடுவர். இறைதூதர் ஜோனாஸ் (யூனுஸ் அலைஹி) அவர்களிடம், எந்த விசேட அடையாளமும் இருக்கவில்லை" என்று விடையளித்தார்கள்.

இந்த பிபிலிய நூலின் பிரிவுகள் இவ்விடயம் பற்றி இவ்வாறாக எடுத்துக்கூறினும், பிபிலிய நூலின் ஏனைய சுவிசேஷங்கள், இயேசுநாதர் பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டியதாகக் கூறுகின்றன. பிபிலிய நூலில், பல இறை தூதர்கள், இயற்கையைக் கடந்த பல அற்புதங்களை நிகழ்த்தியதாகக் கூறப்பட்டு, அவ்வற்புதங்கள் அவற்றை நிகழ்த்திய இறை தூதர்களின் பெயர்களைக்கொண்டு விவரிக்கப்பட்டபோதிலும், உண்மையில், அவையாவும், எல்லாம் வல்ல இறைவனால், அவனின் முகவர்கள் மூலம் நிகழ்த்தப்பட்ட மனித சக்திக்கு அப்பாற்பட்டவைகளேயாம்.

இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள், இறைதூதர் ஈஸா (அலை) அவர்கள் உலகில் தோன்றியதற்கு அறுநூறு ஆண்டுகளுக்குப்பின், அரேபிய நாட்டின் தலைநகர் மக்காவில் அவதரித்தார்கள். அவர்கள் 40ஆம் வயதில் இறைதூதுத்துவம் அருளப்பட்டு. மக்கள் மத்தியில் போதனையை ஆரம்பித்ததும், முற்காலத்திய இறைதூதர்கள் முன்பு. அவர்களின் சமூகங்களைச் சேர்ந்த மக்கள் கேட்டதேபோன்று. அரேபிய மக்களும், அவர்கள் மத்தியில் தோன்றிய இறைதூதர் (ஸல்) அவர்கள். தனது அந்தஸ்தை நிரூபிக்க, அற்புதங்களை நிகழ்த்திக் காட்டவேண்டும் எனக் கேட்டனர். அவ்விடயத்தை (அல்-குர்ஆன், 29 : 50) பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "எனினும், அவரின் இறைவனிடமிருந்து, ஏன் அவருக்கு அடையாளங்கள் இறங்கவில்லை? என, அவர்கள் வினவுகின்றனர். பொதுவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் இறைதூதர்கள் சம்பந்தமான மனப்போக்கு அவ்வாறுதானிருந்து வந்துள்ளது. அரேபியர்களின் கோரிக்கை பின்வருமாறு விசித்திரமானதாய் அமைந்திருந்தது. "முஹம்மத் (ஸல்) அவர்கள், மக்கள் நேரிலே நின்று பார்க்கக் கூடியவாறு, சுவர்க்க உலகிற்கு ஒரு ஏணி வழியாக ஏறிச்சென்று இறைவனிடமிருந்து தன் வேதநூலைப் பெற்று வர வேண்டும். அது நிகழ்ந்தால்தான், நாங்கள் நம்பிக்கை கொள்வோம். அல்லது, அங்கு தொலைவில் காணப்படும் பெரும் மலையை அவர்கள தங்கமாக மாற்ற வேண்டும்" என்று கேட்டனர்.

அந்த சந்தேகப்பிரகிருதிகளான நம்பிக்கையற்றோரின் அந்நியாயமற்ற கோரிக்கையைக் கேட்ட நபி முஹம்மத் (ஸல்) அவர்கள், தனது பசுங்குரலில் பின்வருமாறு விடை பகர்ந்தார்கள். "யான் என்னை ஒரு வானவப் பெரியாரெனச் சொல்லிக்கொள்கின்றேனா? அல்லது இறைவனின் திரவியங்கள் யாவும் என்னிடம் உண்டென உரிமை கொண்டாடுகின்றேனா? அவற்றில் எதுவுமில்லை. யான், உண்மையாக இறைவனால் எனக்கருளப்பட்ட கட்டளையையே யான் நிறைவேற்றுகின்றேன். நம்பிக்கையற்ற மக்களுக்குக் கூறுமாறு பணிக்கப்பட்டு, அருளப்பட்ட பின்வரும் வாக்கியங்கள் எம் கவனத்துக்குரியன: *''(நபியே!) நீர் இவ்வாறு கூறுக! 'அற்புதங்கள் யாவும் இறைவனிடமிருந்து வருவன. யான் உண்மையில் மக்களை அச்சமூட்டி எச்சரிக்கைசெய்து நல்வழிப்படுத்துபவனேயாகும்' என்று''* *(அல் – குர்ஆன், 29 : 50).*

அந்த அஞ்ஞானிகளின் அறிவற்ற அக்கோரிக்கைக்குப் பதிலாக, மேலும், தான் இறைதூதர் என்பதற்கு அல்-குர்ஆனே போதிய ஆதாரமாயிருப்பதைச் சுட்டிக்காட்டுமாறு, மேல்வரும் திருவாக்கியம் மூலம் இறைவன் பணித்துள்ளான்: *''(முஹம்மதே!) அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்படும் (அல் – குர்ஆன்) வேதநூலை உம்மீது நாமே இறக்கி வைத்துள்ளோம் என்பதே, போதிய விசேட சான்றாக இருக்கின்றதல்லவா?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அதில் நம்பிக்கை கொண்டோருக்கு நிட்சயமாக இறைவனின் நெறிப் படுத்தலும், நல்லருளும் உண்டு''*

*(அல் – குர்ஆன், 29 : 51)*

அல்-குர்ஆனின் நூலாசிரியன் இறைவனாகும் என்பதையும், அந்நூலின் அற்புதத் தன்மையையும் நிருபிப்பதற்காக, இரு சான்றுகள் முன்வைக்கப்படுகின்றன:

(1) *''நாமே (எல்லாம் வல்ல இறைவன்) அந்த வேத நூலை (அல் – குர்ஆனை) இறக்கியுள்ளோம்''*

(2) *இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் எழுத, வாசிக்கத் தெரியாத உம்மி நபீ ஆதலால், அவர்கள் ஒரு நூலாசிரியராயிருந்திருக்கக் கூடிய சாத்தியம் இருக்கவில்லை. அந்த உண்மையை வலியுறுத்தி, பின்வரும் திருவசனம் அதே உண்மையை, மேலும் தெளிவுபடுத்துகின்றது. ''முஹம்மதே! நீர் இந்நூல் இறக்கப்படுவதற்கு முன்பு வாசிக்க முடியாதவராகவும், எழுத முடியாதவராகவுமிருந்தீர், உண்மையாக நிலைமை அவ்வாறிருந்தும், கர்வத்துடன் போலிப் பெருமை பேசுபவர்கள் வீம்புத்தனமாகச் சந்தேகிக்கின்றார் களா?''* *(அல் – குர்ஆன், 29 : 48)*

"நூல்" என்று குறிப்பிடப்படும் 'அல்-குர்ஆன்' இறைவனால் அருளப்பட்ட இறுதி இறைவேத நூலாகும். என்பதற்கு அவ்வேதநூலே தெளிவான சுய சான்றுகளைக் கொண்டுள்ளது. அல்-குர்ஆனின் ஆக்கத்தையிட்டு சந்தேகம்கொள்ளும் அறிவீனர் களுக்கு, அல்-குர்ஆன் ஆசிரியனான எல்லாம் வல்ல இறைவன், பின்வரும் அறிவுரைகளை விடுக்கின்றான்: *''குர்ஆனை மக்கள் ஆழ்ந்து கவனித்து அறிய முயற்சிக்க வேண்டாமா? அந்நூல், இறைவனிடம் இருந்தல்லாது, வேறவர்களிடமிருந்து வந்ததாக இருந் திருப்பின், அதில் மக்கள் அதிகம் தவறுகளையும், முரண்பாடுகளையும் கண்டிருப்பார்கள்''* *(அல்குர்ஆன், 04 : 82)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த மனித நூலாசிரியரின் போதனைதானும் இருபத்திமூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து ஒரே பாணியில் ஒரே பாங்கான வாழ்க்கை நெறிகளைத்தழுவி, சற்றும் பிசகாததாய் இருந்திருக்க முடியாது. அல்-குர்ஆனின் போதனைகள் ஒன்றிணைந்து அமைந்திருப்பதைப் போன்று, அதை அவ்வளவு காலமாக, அவ்வாறாக நிலை பெறுத்தி வைத்திருத்தல், எந்த மனித சக்திக்கும் சாத்தியமாகாது. ஆதலால், அல்-குர்ஆனின் ஆக்கம் பற்றிய சில இஸ்லாத்தின் எதிரிகளான நிராகரிப்பாளர்களின் பிதற்றல்கள், அவர்கள் தங்களின் சுய நியாய புத்திக்கும், நல்லறிவுக்கும் எதிராக, பிடிவாதமாக வேண்டுமென்றே எழுப்பப்படுவனவாகும்.

இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்களிடம், மக்கள் அற்புதங்களுக்காகக் கோரிக்கை விடுத்தபோதெல்லாம், இறைவனின் அல்-குர்ஆன், சகல அற்புதங்களிலும் மகா அற்புதமாகும் என்னும் உண்மை சுட்டிக்காட்டப்பட்டு, அறிவுறுத் தப்படுகின்றது. கல்வியறிவும், ஆத்மீக உள்ளுணர்வும், நீதி நேர்மையும், மற்றும் பண்பியல்புகள், நிறை மனித புருடத்துவ முடையோர்கள் யாவரும், அல்-குர்ஆன் எல்லாம்வல்ல ஏக இறைவனால், இறுதிவேத நூலாக அருளப்பட்ட உண்மையான அற்புதமாயிருப்பதின் அடையாளத்தை அறிந்துணர்ந்து, அதை அவ்வாறே ஏற்றுக் கொண்டுள்ளரென, அல்-குர்ஆனே எடுத்துக் கூறுகின்றது:

*''அவ்வாறன்று, கல்வி அறிவு அளிக்கப்பட்டவர்களில் அவை (அல் – குர்ஆன் வாக்கியங்கள்) பதியத்தக்க தெளிவான வாக்கியங்களாயிருக்கின்றன. அக்கிரமச் செயல்களைப் புரிகின்றவர்களைத் தவிர்த்து, (ஏனையோரெவரும்) எம் பாக்கியங்களை நிராகரிக்கமாட்டார்கள்''*

*(அல் – குர்ஆன், 29 : 49)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "அதன் நிருபணம்"

இன்று உலகின் தொண்ணூறு கோடி முஸ்லிம்கள், எந்தத் தயக்கமுமின்றி அல்-குர்ஆன் எல்லாம் வல்ல ஏக இறைவனின் வார்த்தைகளைக்கொண்ட இறுதி வேதநூல் என மனமார ஏற்று, அதை மகிமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம்களல்லாதோர்தானும், இறைவனின் அவ் வேதநூலின் அற்புதத்தன்மைகள் பற்றி புகழுரைகள் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். உதாரணமாக, சங். R. போஸ்வட் ஸ்மித் அவர்கள், தனது "முஹம்மத்தும் முஹம்மதியமும்" என்று தலைப்பிட்ட நூலில், அல்-குர்ஆன் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "அல்-குர்ஆன் ஒரு மெய்யறிவு நிறைந்த புனிதம்வாய்ந்த அற்புதமான நூல்" என்று கூறுகின்றார். திரு. A. J. ஆபெரி என்னும் பேரறிஞர் தனது அல்-குர்ஆனின் ஆங்கிலமொழி பெயர்ப்பின் முன்னுரையில், அல்-குர்ஆன் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "அல்-குர்ஆன் ஓதப்படுகின்றதை யான் செவியுற்றுக் கேட்கும் போதெல்லாம், ஏதோ ஒரு அபூர்வ இசை பக்கவாத்தியங்களோடு, அருமையாக என் இதயத் துடிப்புடன் ஒட்டியதாக இசைக்கப்படுவதை உணர்கின்றேன்." என்று கூறிய திரு. ஆபெரி அவர்களின் வார்த்தைகள், அவரை ஒரு நம்பிக்கைகொண்ட முஸ்லிமாகக் காட்டக்கூடியனவாயிருந்த போதிலும், அவர் தனது வாழ்க்கையில் ஒரு கிறிஸ்தவராக வேயிருந்து காலமானார்.

மாமடியூக் பிக்தால் என்னும் மற்றொரு அல்-குர்ஆனின் ஆங்கில மொழிபெயர்ப்பாளர், அவரின் முன்னுரையில் பின்வருமாறு விபரிக்கின்றார். "அல்-குர்ஆனின் எவராலும் பின்பற்ற முடியா, அபூர்வ இனிய இசையின் அற்புத ஒலிகள்தான், மக்களை இன்ப வெள்ளத்தில் திளைக்கவைத்து, கண்ணீரை உகுக்க வைக்கின்றன." என்று கூறிய இப்பேரறிஞர், அல்-குர்ஆனை மொழி பெயர்த்து முடிக்கு முன்பே இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்.

நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் காலத்தில் வாழ்ந்த நல்லறிவுடைய மக்கள், அல்-குர்ஆனின் அமைப்பில் செறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் உதாரத்தன்மையையும், அபூர்வ அழகொளிர் இலட்சணங்களையும் அறிந்துணர்ந்து, இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர். மாறாக நம்பிக்கைகொள்ளாதோரும், சந்தேகிகளும், அல் - குர்ஆனைப்பற்றி ஆய்ந்தறிந்து. அறிஞர்கள் கூறுகின்ற கருத்துக்கள் பக்கச்சார்பானவையென்றே தொடர்ந்து கூறிவருகின்றனர்.

அகிலத்தின் அண்டவெளியையும், இவ்வுலகின் வானவியலையும், தூரதிருஷ்டிகண்ணாடி மூலம் ஆய்ந்தறியும் விஞ்ஞானிகளிடம், "இவ்வகிலம் எவ்வாறு தோன்றிற்று?" என கேட்போமாயின், அவர்களின் ஆய்ந்தறிந்த பதில் பின்வருமாறு வெளிப்படுகின்றது. "பல கோடி வருடங்களுக்கு முன்பு, அகிலத்திலுள்ள யாவும் ஒன்றிணைந்து, ஒரேபெரும் சடப்பொருளாயிருந்தது. அப்பாரிய பிண்டத்தின் மத்தியில் ஏற்பட்ட பேரதிர்ச்சிதரும் பிரமாண்ட வெடிப்பின் காரணமாக, அச்சடப்பொருள் பிண்டம், பெரும் பெரும் துண்டங்களாகச் சிதறுண்டு, நானா திசைகளையும் சென்றடைந்திற்று. அப்பாரிய வெடிப்பின் காரணமாகவே, ஆகாயவெளியில், சூரியன், சந்திரன், நட்சத்திர மண்டலங்கள் ஆகியன தோற்றம்பெற்றன. அவ்வாறு ஏற்பட்ட கோளங்கள் யாவும், அததற்கென அமைந்த பாதைகளில் மிதந்து செல்கின்றன. அகிலமானது விரிவடைந்து கொண்டே செல்கின்றது. நட்சத்திரங்கள், எம் பார்வையிலிருந்து மென்மேலும் விலகிக் கொண்டே செல்கின்றன. அவற்றைப் பார்த்தறிவதற்காக, நாம் கூடியகெதியில் மேலும் சக்திவாய்ந்த தூரதிருஷ்டிக் கண்ணாடியை உற்பத்தி செய்யவேண்டிய அவசியம் ஏற்படும்" என்று கூறுகின்றனர். அகிலத்தின் தோற்றம் பற்றிய இப்பாரிய உண்மைகளை, விஞ்ஞானி சென்ற ஐம்பது ஆண்டுக் காலத்துள்தான் கண்டுபிடித்துள்ளதாகவும் ஒப்புக் கொள்கின்றனர்.

இற்றைக்கு 1400 வருடங்களுக்கு முன்பு, அராபியப் பாலைவனத்தில் வாழ்ந்த படிப்பறிவில்லா உம்மி நபி முஹம்மத் (ஸல்) அவர்கள், இறைவனிடமிருந்து அறிவுறுத்தப்பட்டதின் பிரகாரம், அவர்களின் பசுங்குரலில் ஓதிய அல்-குர்ஆனிய வார்த்தைகளே மேல்வருவன: *"(ஆரம்பத்தில்) ஒன்றிணைந் திருந்த வானங்களையும், பூவுலகையும், நாமே பிரித்தமைத் தோம் என்பதையும், உயிர்ப்பிராணி ஒவ்வொன் றையும்,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நீரிலிருந்துதான் படைத்தோம் என்பதையும்; நிராகரிப் போர்கள் (நாஸ்திகர்களும், சந்தேகிகளும்) கவனத்தில் கொள்ள வேண்டாமா?" (அல் – குர்ஆன் , 21 : 30) "மேலும், இரவையும், பகலையும், சூரியனையும், சந்திரனையும், எல்லாம் வல்ல இறைவனே சிருஷ்டித்தான், விண்ணிலுள்ள உறுப்பினங்கள், அதனதற்கமைக்கப்பட்ட பாதைகள் வழியாகவே, மிதந்து செல்கின்றன" (அல் – குர்ஆன், 21 : 33)* திரு. தோமஸ்கார்ளைல் இவ்விடயமாக பின்வருமாறு கூறுகின்றார். "நாங்கள் எம்மிடையே, விஞ்ஞானவியலாளர்களையும், கலைக்களஞ்சியங்களையும் வைத்துக்கொண்டு இவ்வகிலத்தின் இயக்கத்தில், இறைவன் வகிக்கும் அத்திவாரமான மிகமுக்கிய நிலையை மறந்து விடுகின்றோம். அந்தப் பூதாகரமான வெடிப்பைப்பற்றி, அகிலத்தை ஆக்கியோனின் மனித இனத்தார்க்கான வேத நூல்களிலிருந்தல்லாது, வேறெவ்வாறு பெற்றிருக்க முடியும்?" என்கிறார்.

உயிரியலாளர்களான விஞ்ஞானிகளிடம், உலகில் உயிர்கள் எங்கே, எவ்வாறு ஆரம்பமாயின? என்று கேட்போமாயின், நிராகரிப்போரான அவ்வுயிரியலாளர்கள் பின்வருமாறு விடையிறுக்கின்றனர். "பலகோடி வருடங்களுக்கு முன்பு, கடல், சமுத்திரம் முதலான நீர்நிலைகளில் மூலாதார சடத்துவப் பொருள் தோன்றி, (Protoplasm) எனும் ஜீவ அணுக்களை உருவாக்கிற்று. அந்த ஜீவ அணுக்கள் நீர் நிலைகளிலேயே இடம் பெற்றதால், சகல உயிரினங்களும் நீரிலிருந்துதான் உண்டாயிற்று." என்று கூறுவர். அந்த உண்மை எப்போது கண்டுபிடிக்கப்பட்டது? என்று விசாரித்தால் வானவியலாளர் கொடுத்த 'ஒரு சில வருடங்களுக்கு முன்பு' என்னும் அதே விடையையே தருவர். இற்றைக்கு 1400 வருடங்களுக்கு முன்பு அரேபியப் பாலைவனத்தில் வாழ்ந்த படிப்பறிவில்லாத உம்மி நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவனிடமிருந்து அறிவுறுத்தப்பட்டதின் பிரகாரம் அவர்களின் பசுங்குரலில் ஓதிய வார்த்தைகள் மேல் வருவன: *"மேலும் நாம் ஒவ்வொரு உயிர்ப்பிராணியையும், நீரிலிருந்து தான் சிருஷ்டித்தோம் என்பதையும், நிராகரிப்பவர்கள் (நாஸ்தியர்களும், சந்தேகிகளும்) கவனத்தில்கொள்ள வேண்டாமா? (அல் – குர்ஆன், 21 : 30)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் வல்ல, யாவும் அறிந்த அகிலத்தின் சிருஷ்டி கர்த்தாவின் வார்த்தைகளான அல்-குர்ஆனிய அறிவுரைகள்; அறிவுடைய மக்களை விழித்து சந்தேகங்களைத் தெளிவாக்கும் விடைகளாகவே கூறப்பட்டுள்ளன. மேலும் தாவரவியலாளர்கள், விலங்கியலாளர்கள், பௌதிகவியலாளர்கள் ஆகியோர்கள் பொருட்களின் இயல்பைக் கண்டறியும் ஆற்றல்களைக் கொண்டவர்களாயிருந்தும், அகிலத்தின் இயற்கைத் தொகுப்பான சடப்பொருட்கள் அத்தனையையும் ஆக்கிய மகாசிருஷ்டி கர்த்தாவை இறைவனாக ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இறைதூதர் (ஸல்) அவர்கள் பின்குறிப்பிடப்படும் விஞ்ஞானவியல் கண்டுபிடிப்பை பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு அல்-குர்ஆன் திருவாக்கியம் வாயிலாகக் கூறுவதற்கு எவ்வாறு முடித்திருக்குமென, அவர்கள் சிந்திக்க வேண்டாமா? *''புகழ்கள் யாவும் (எல்லாம் வல்ல) இறைவனுக்கே உரியன. அவன், உலகின் சிருஷ்டிகள் யாவற்றையும் ஜோடி ஜோடியாக சிருஷ்டித்துள்ளான். நிலத்தில் வளரும் தாவரங்கள், மனித இனத்தினர், மிருக இனங்கள் முதலானவைகளுடன் சாதாரணமாகத் தெரிந்து கொள்ளாதவைகளும், அவ்வாறே அமைக்கப் பட்டுள்ளன.'' (அல் – குர்ஆன் , 36 : 36)*

இறைவனருளிய அல்-குர்ஆன் வாக்கியங்கள், சுய விளக்கமுள்ளவைகளாயுள்ளன. அல்-குர்ஆனைக் கற்பவர்கள், மனிதனின் ஒவ்வொரு பிரதான கண்டுபிடிப்பிலும், இறைவனின் அடையாள முத்திரை (SEAL) தவறாது இருப்பதையும், அவை, பேரன்புமிக்க கிருபாகடாட்சமுடைய இறைவன், மனிதனின் நம்பிக்கையைப் பலப்படுத்தக் கையாண்டருளி நெறிப்படுத்தும் அறிவுறுத்தல்களாகும் என ஏற்றுக்கொள்வர்.

உதாரணமாக, (அல்-குர்ஆன் 30:22) திருவாக்கியத்தை எம் கவனத்துக்கு எடுத்துக் கொள்வோம். *''இவற்றுள், கல்வி அறிவுடையவர்களுக்கு நிட்சயமாக பல அத்தாட்சிகள் உண்டு.''* ஆனால் அறிவுடையவர்களெனக் குறிப்பிடப்படுவோர்கள் மிகுதமாக உலகாதய அறிவையும், அகம்பாவமும், பெருமையும், தலைக்கனமும் கொண்டவர்களாக இருக்கும் பட்சத்தில், மேற்படி அல்-குர்ஆனிய நெறி பொருத்தமானதாக அமையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "அதன் புனிதத்துவம்"

'அற்புதம்' என்பதை 'மனித சக்திக்கு அப்பாற்பட்ட செயல்' எனக்கொள்ளலாம். நிராகரிப்பாளர்கள் கம்யூனிஸ வாதிகள், அசத்தியவாதிகள், சிலைவணங்கிகள் முதலான இறை மறுப்பாளர்கள் யாவருக்கும், பூரண திருப்தியளிக்கும் முறையில் இறைவனைப்பற்றிய உண்மைகளையும், உள்ளடக்கிய அல்-குர்ஆன், அற்புதங்கள் நிறைந்த இறை வார்த்தைகளாகும் என்பதையும் மிகத் திட்டவட்டமான அறிவியல் கற்கைமுறை மூலம் நிரூபிக்கக் கூடியனவாகும். கணிதவியல், சந்தேகத்துக்குரியதாகவோ, பக்கச்சார்புடை யதாகவோ இருப்பதில்லை. அத்துடன், கணிதவியல் கையாழும் மொழியும், முறைகளும், உலகளாவிய நிலையில் வேறுபாடுகளற்றவை.

அல்-குர்ஆனின் அற்புதத் தன்மையை பரீட்சித்தறிந்து கொள்ள விளைபவர் அரபு மொழி அறிவுடைய வராகவோ, விசேட பாண்டித்தியமுடையவராகவோ, இருக்க வேண்டிய அவசியமில்லை. அப் பரீட்சையில் ஈடுபடுவதற்கு வேறு விசேட தகைமைகளும் தேவையில்லை. அதற்குத் தேவையாக இருப்பதெல்லாம், சாதாரண கண்பார்வையும், குறைந்தது பத்தொன்பது வரை கணக்கிட்டு எண்ணுவதற்குத் தெரிந்திருத் தலுமாகும்.

எம் பாவனையிலுள்ள அல்-குர்ஆனின் அத்தியா யங்களினதும், வாக்கியங்களினதும் ஒழுங்கமைப்பு, இறைதூதர் (ஸல்) அவர்களின் நேரடியான அறிவுறுத்தலுக்கேற்ப அமைக்கப்பட்ட ஒழுங்கைக் கொண்டதாகும். மரபாக அமைந்து விட்ட அவ்வொழுங்கு, இறைதூதர் (ஸல்) அவர்களுக்கு, அவர்களின் வாழ்க்கைச் சம்பவங்களோடு தொடர்புறுத்தி அவை அருளப்பட்டனவாகையால், இரண்டு நிலைகளும் வெவ்வேறான ஒழுங்குகளைக்கொண்டவை. எம் நபி பெருமானார் (ஸல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள், தனது 40ஆம் வயதில் ஒரு நாள் மக்காவிலிருந்து வடக்கே சுமார் மூன்று மைல்கள் தொலைவிலமைந்துள்ள 'ஹிறா' மலைக் குகையிலிருந்தார்கள். அங்கு, அவர்கள் நிம்மதியையும் சமூக நலனையும் நாடியவர்களாக, தனித்திருந்து, பசித்திருந்து, தியானத்திலாழ்ந்திருந்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். சில வேளைகளில் அவர்களின் அருமை மனைவி கதீஜா (றலி) அவர்கள் துணையாகச் சென்றார்கள்.

அவ் வருட றமழான் மாதத்தின் 27ஆம் தினத்தன்று பெருமானார் (ஸல்) அவர்கள், தனியாக 'ஹிறா' குகையில் தியானித்திருந்த வேளையில், வானவர்கோன் ஜிப்றயீல் (அலை) அவர்கள், பெருமானார் (ஸல்) அவர்களை விழித்து, அறபு மொழியில் "இக்ற.'." (ஓதுவீராக!) எனக் கேட்கின்ற காட்சி நிகழ்ந்திற்று. மரபான ஒழுங்கின் 96ஆம் அத்தியாயமான 'அல்-அலக்' சூறாவின் முதல் ஐந்து வாக்கியங்களுமே, ஜிப்றயீல் (அலை) அவர்களின் முதலாவது விஜயத்தின்போது அருளப்பட்டவைகளாகும்.

இறைதூதர் (ஸல்) அவர்கள், 'ஹிறா'க்குகையில் தனியாக, தியானித்திருந்தவேளை ஏற்பட்ட சம்பவத்தின் அதிர்ச்சியிலிருந்து விடுபட்டதும், தான் பெற்றுள்ள இறை செய்தியையிட்டு, ஆழ்ந்து சிந்தனை செய்தார்கள். அச்செய்தி, அவர்களின் உள்ளத்தில் அனுபவத்தையும், உணர்வையும் ஏற்படுத்தியதுடன், மனித சமூகத்திற்குப் பயன்தரும், அது போன்ற மேலும் பல இறை - செய்திகள் தனக்கருளப்பட வேண்டுமென்னும் அவாவையும் உண்டாக்கிற்று. அதையடுத்த திருவாக்கியங்கள் அருளப்படும்வரையிருந்த இடைக்காலத்தில், பெருமானார் (ஸல்) அவர்கள், மக்களிடையே, இறைவனை ஏற்று, உயர் நெறிகளைப் பின்பற்றி, கண்ணியத்துடன் மக்கள் வாழ வேண்டிய அவசியம்பற்றிக் கூறிக்கொண்டிருந்தார்கள். அதன் காரணமாக, மக்காநகர அதிகார வர்க்கத்தினர்கள், பெருமானார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஸல்) அவர்களைப் பற்றி அநாகரீகமாகப் பிதற்றத் தொடங்கினர். அந்த அதிகார வெறியர்களின் அசாத்திய கட்டுக்கதை உளறல்களுக்கு உரிய விடையைப்போன்று, ஜிப்றயீல் (அலை) அவர்களின் இரண்டாவது விஜயம் நிகழ்ந்திற்று.

இரண்டாம் விஜயத்தின்போதுதான், அல்-குர்ஆனின் 68ஆம் அத்தியாயமான 'அல் - கலம்' சூறாவின் திரு வாக்கியங்கள் அருளப்பட்டிற்று.

**இறைதூதர் (ஸல்) அவர்களுக்கு ஆரம்ப இருமுறை களிலும் அருளப்பட்ட அல்-குர்ஆன் வாக்கியங்கள்.**

முதலாவதாக அருளப்பட்ட 96ஆம் அத்தியாயமான 'அல் - அலக்' சூறாவின் முதல் ஐந்து திருவாக்கியங்கள் :

(1) *"அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடை யோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக!"*

(2) *"அவனே, மனிதனை இரத்தக் கட்டியிலிருந்து படைத்தான்".*

(3) *"(நபியே!) மேலும் நீர் ஓதுவீராக! உமது இறை வனிடம் மிகவும் பாக்கியங்களுண்டு."*

(4) *"அவன்தான் (மனிதனுக்கு) எழுது கோலைக் கொண்டு (எழுதக்) கற்றுக்கொடுத்தான்."*

(5) *"(அவன்தான்) மனிதன் அறிந்திருப்பவையாவற் றையும் அவனுக்குக் கற்றுக்கொடுத்தான்."*

**இரண்டாவதாக அருளப்பட்ட 68ஆம் அத்தியா யமான 'அல் - கலம்' சூறாவின் திருவாக்கியங்கள் :**

*"அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனு மாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு ஆரம்பிக்கின்றேன்".*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) ''நூன், எழுதுகோல் மீதும், (அதனைக் கொண்டு) அவர்கள் எழுதிக் கொண்டவைகள் மீதும் சத்தியமாக!''

(2) ''நபியே! நீர், உமது இறைவனின் அருளால், சித்தசுயாதீன மற்றவராகவோ, பேய்பிடித்தவராகவோ இல்லவேயில்லை''

(3) ''அன்றியும், உமக்கு நிட்சயமாக மேன்மை மிகு கண்ணியம் நிறைந்த நற்கூலி உண்டு''

(4) ''நீர், மிகவும் திண்ணமாக, மகத்துவமும் சிறப்பியல்புகளும் நிறைந்த நற்குணங்களையுடையோராகவேயிருக்கின்றீர்.'' (அல் – குர்ஆன், 68 : 1 – 4)

இரண்டாம் விஜயத்தின்போது அருளப்பட்ட அல்-குர்ஆன் திருவாக்கியங்கள், நிராகரிப்பாளர்களின் பொய்க் கூற்றுக்களுக்குரிய விடையாகவே அருளப்பட்டிற்று. அதன் பின்பு, ஜிப்றயீல் (அலை) அவர்கள், இறைதூதர் (ஸல்) அவர்களை மூன்றாம் முறை சந்தித்தபோது, 73ஆம் அத்தியாயமான ''முஸம்மில்'' சூறாவின், ஆரம்ப ஐந்து திருவாக்கியங்கள் அருளப்பட்டிற்று.

**மூன்றாவதாக அருளப்பட்ட 73ஆம் அத்தியாயம் "முஸம்மில்" சூறாவின் ஆரம்ப ஐந்து திருவாக்கியங்கள் :**

(1-2) ''போர்வையால் தன்னைப் போர்த்திக்கொண்டிருப்பவரே! (நபியே!) நீர், இரவில், (தொழுகைக்காக எழுந்து) நிற்பீராக! (முழு இரவிலுமல்ல) அதன் சொற்பமான பாகத்தில்;

(3-4) ''(அதாவது) இரவின் பாதிநேரமோ, குறைவாகவோ, குர்ஆனை நன்கு உச்சரித்து, திருத்தமாகவும், மெதுவாகவும் ஓதுவீராக!''

(5) ''நாம், நிச்சயமாக, அதிசீக்கிரத்தில், கருத்தாழமிக்க செய்திகளை உம்பால் அனுப்பிவைப்போம்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்த அடக்கமும் சிறப்பியல் பண்புகளும் உடைய இறைவனது தன்னிகரில்லா அடியாரான முஹம்மத் (ஸல்) அவர்கள் தனக்கருளப்படும் இறைவாக்கியங்கள் கருத்தாழம் மிக்கதாயும், நலமவிளைவிக்கக் கூடியதாயும், அழகாயமைந் தனவாயுமிருக்கக் கண்டார்கள். ஏனெனில், அவற்றின் ஆசானான எல்லாம்வல்ல பேரருள்மிக்க இறைவன் தனது இறுதித் திருத்தூதர் வாயிலாக, மனித இனத்தினருக்கான அறநெறிகளையும் ஆழமான கருத்துக்களையும், உயர்வான அழகொளிர் முறையில் விளக்க நாடி தேர்ந்து அருளினான். ஜிப்றயீல் (அலை) அவர்கள், இறைதூதர் (ஸல்) அவர்களிடம் நான்காம் முறை விஜயமளித்தபோது, அல்-குர்ஆனின் 74ஆம் அத்தியாயமான "சூறா" 'முதஸ்ஸிர்' முதல் முப்பது திருவாக்கியங்கள் அருளப்பட்டிற்று.

*அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனு மாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் (ஓதுகிறேன்)*

(1-5) *"(வஹியின் அதிர்ச்சிகரமாக) போர்த்திக்கொண்டி ருப்பவரே! (நபியே!) நீர், எழுந்து, (மனிதர்களுக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக! உம் இறைவ னைப் புகழ்ந்து துதித்து பாராட்டி வழிப்படுக! ஆடைகளைத் தூய்மையாக வைத்துக்கொண்டு, அசுத்தங்கள், அனாச்சாரங்கள் யாவையும் ஒதுக் கிக்கொள்க!"*

(6-7) *"(நீர் கொடுப்பதை விட) அதிகமாகப் பெறக் கருதி (எவருக்கும்) நன்றி செய்யாதீர். உம் இறைவனுக்காக (கஷ்டங்களை) பொறுமையுடன் சகித்துக்கொள்க!"*

(8-10) *"எக்காளம் (சூர்) ஊதப்படும் தினமானது மிகக் கஷ்டமான நாளாகும். (அந்தநாள்) நிராகரிப்பாளர் களுக்கு மிகவும் கஷ்டமானதாக இருக்கும்."*

(11-17) *"(நபியே! நீர் சிபாரிசுக்கு வராது). என்னையும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சிருஷ்டித்த மனிதனையும் விட்டுவிடுக! (ஏனெனில்) நாம் அவனுக்கு ஏராளமான பொருளையும், எந்நேரமும் அவனோடிருக்கக கூடிய மக்களையும் கொடுத்து, அவனுக்கு வேண்டியயாவையும் சித்தப்படுத்தியும் வைத்தோம். ஆனால், அவனோ, எம் வழிகாட்டல் களுக்கு முற்றிலும்மாறாக வாழ்பவனாயிருந்துகொண்டு, நாம், அவனுக்கு மென்மேலும் கொடுத்துக கொண்டிருக்க வேண்டுமென ஆசைப்படுகின்றான். அதிசீக்கிரத்தில், அவன், தன்னை ஒரு கஷ்டங்களின் சிகரத்தில் காண்பான்.''

(18 – 23) ''நிச்சயமாக, அவன் (இந்த குர்ஆனைப் பற்றி) ஒரு பொய்யைக் கற்பனை செய்தான். அவன் அழிந்து நாசமாகிப் போகட்டும். பின்னர் அவன். (தன் இல்லாமையைப் பற்றி) முகம் சுளித்து, கடு கடுத்து, புறங்காட்டிச் சென்றான். அதன் பின்னரும், அவன் கர்வம் கொண்டான்.''

(24 – 30) ''அவன், 'இது, மயக்கக்கூடிய சூனியமேயல்லாது வேறில்லை. இச் சொற்கள் மனிதர்களுடையனவே யன்றி வேறில்லை' என்றும் கூறினான். ஆகவே, நாம் அவனை நரகத்தில் எறிவோம்! (நபியே!) அந்த நரகம் எப்படி யானதென நீர் அறிவீரா? அந்த நரகமானது, தன்னில் எறியப்படுவோரை (எரித்து கரியாக்கி) மிச்சம் வைக்காது அதன்மேல் பத்தொன்பது இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "அல்-குர்ஆன் பற்றிய மாமேதைகளின் நிருபணக் கூற்றுக்கள்"

அல்-குர்ஆனின் 74ஆம் அத்தியாயத்தின் 30ஆம் வாக்கியம், பிரதான வினாவுக்கு ஆழமான விடையாகவும், மற்றொரு குற்றச்சாட்டுக்குரிய பதிலாகவும் அமைந்துள்ளது. நிராகரிப்பாளர்கள் முதலில் இறைதூதர் (ஸல்) அவர்கள் சித்த சுவாதீனமற்றிருப்பதாகக் குற்றஞ்சாட்டினார்கள். ஆனால், சமூகத்தில் சிறந்த அந்தஸ்தையுடைய கௌரவமிக்க பெரியார்கள் இறைதூதர் (ஸல்) அவர்களின் போதனையை ஏற்று புதிய மார்க்கத்தைத்தழுவுவதைக் கவனித்த நிராகரிப்பாளர்கள், தங்களின் குற்றச்சாட்டைமாற்றி, 'முஹம்மத் ஒரு மகா மந்திரவாதியாகவுள்ளார்' என்று கூறத்தொடங்கினர். அதாவது, முஹம்மத் (ஸல்) அவர்கள், அல்-குர்ஆன் வாக்கியங்களை, இனிமை ததும்ப அழகுற ஓதிக்காண்பித்து, மக்களை மயங்க வைத்து, தன்மார்க்கத்தில் சேர்த்துக்கொள்வதாகக் குற்றஞ்சாட்டினார்கள்.

நாம் அக்குற்றச்சாட்டை எதிர்கொள்வதற்கு முன்பதாக, பிரக்தியாதிபெற்ற பேரறிஞர் தோமஸ்காளைல் அவர்கள் அதே குற்றச்சாட்டுக்கு பின்வருமாறு பதிலளிக்கின்றார். "முஹம்மத், மக்களை பொய்யைக் கொண்டு ஏமாற்றுபவராகவோ, ஜாலவித்தைகள் புரிந்து மோசடி செய்பவராகவோ சிஞ்சித்தேனு மில்லை. அவர், தாபம் நிறைந்த உணர்வுத் தீபத்தால் பொங்கிக் கொண்டிரும் புனித இதயத்தையுடைய ஒரு உண்மையிலும் உண்மையான உத்தமராகும்" என்று கூறுகின்றார். இறைவனின் வாழ்க்கை வழிகாட்டலை உரியவாறாக அறிந்து விளங்கிக் கொள்ள முடியாதிருந்த அனாச்சாரங்களை சிறப்பியல்புகளாய்க் கொண்டு வாழ்ந்த அக்கால மக்கா நகரின் அஞ்ஞானிகளான மக்கள், எவ்வகையான ஒழுக்க விதிகளுமின்றி, விலங்கினங் களைப்போன்று வாழ்ந்து வந்தவர்களாகும். அவர்கள் மத்தியில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானவர்களின் அறப்போதனை, ஏற்படுத்திய மகத்தான ஆக்கபூர்வமான மாற்றங்களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும், சமூகம் மாற்றம் பெற்றுக்கொண்டு போவதை உரியவாறு விளங்கிக் கொள்ள முடியாமையினாலேயே, அவற்றை மந்திர வித்தை, ஜாலவித்தை என்றும் அழைக்கலாயினர். அந்நிலைமை பொதுவாக அம்மக்கள் அடைந்திருந்த மனித விருத்தியின் குறைவான தராதரம், அனாச்சாரப் பழக்க வழக்கங்கள் நிறைந்த வாழ்க்கைச் சூழல் முதலானவற்றால், ஏற்பட்டதாகும்.

நிராகரிப்பாளர்கள், மனமுரண்டாக, நியாயமற்றவாறு, "முஹம்மத், தனது குர்ஆனை, யூதர்கள் கிறிஸ்தவர்களினதும் வேதநூல்களிலிருந்து பிரதி பண்ணியும், தானாக எழுதியும் ஆக்கிக் கொண்டார்." என்று கூறுகின்றார்கள். இக்குற்றச்சாட்டு சம்பந்தமாக, உலகின் வரலாற்றாசிரியர்கள் தலைவன் "கிப்பன்" என்பார். தனது "உரோமானிய ஏகாதிபத்தியத்தின் சிதைவும், வீழ்ச்சியும்" என்று தலைப்பிட்ட நூலில், பின்வருமாறு கூறுகின்றார். "முஹம்மத் அவர்களின் மார்க்கக்கோட்பாடுகள் மனித சந்தேகங்கள், மாறுபாடான கருத்துக்கள் முதலானவற்றிலிருந்து, நீக்கமற நீங்கி, தெள்ளிதிற்தெளிவுபெற்றவை. மேலும், அவரின் வேத நூலாகிய குர்ஆன் இறைவனின் ஒருமைத்துவத்திற்கு ஒரு உத்தம அத்தாட்சியான உறுதி மொழியாகும்." என்று கூறுகின்றார்.

இரண்டாவதாக, சென்ற நூற்றாண்டின் அதிசிறந்த சிந்தனையாளர்களில் ஒருவராக வர்ணிக்கப்படும் தோமஸ் காளைல் அவர்கள், தனது "அருஞ்சாதனைத் தலைவர்களும், அவர்கள் கணிக்கப்படுதலும்" என்று தலைப்பிட்ட நூலில் இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை, உலகின் அருஞ்சாதனைத் தலைவர்களிலொருவராகத் தேர்ந்து, அவர்களின் சன்மார்க்கப் போதனையையிட்டு பின்வருமாறு கூறுகின்றார். "அம்மகத்துவமிக்க மனிதரின் இதயத்திலிருந்து அவ்வார்த்தைகள், நேராகக்களங்கமற ஒலிக்கின்றவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகவேயிருந்தன. மக்கள் கரிசனையுடன் அவ்வார்த்தை களை, காதுதாழ்த்திக் கேட்கின்றவர்களாயிருந்தனர். கேட்டறிவு பெறுவதற்குத் தகுதியான வேறேதுமில்லா நிலையில், அவர்கள் அவ்வார்த்தைகளை மிகக்கரிசனையோடு காதுதாழ்த்திக் கேட்பவராயிருந்தனர். மக்களிடையே நிகழ்த்தப்பட்ட ஏனைய பேச்சுக்களின் வார்த்தைகள் முஹம்மத் அவர்களின் போதனையோடு ஒப்பிடப்படும்போது, அவையாவும், உஷ்ணமும் அழுக்கும் நிறைந்த வெறும் காற்று என்றே கூறலாம்". இந்தத் தலைசிறந்த சிந்தனையாளர் ஒரு அங்கிளிக்கன் கிறிஸ்தவராகவே காலமானார்.

மூன்றாவதாக, சங். R. போஸ்வேர்த் ஸ்மித் அவர்கள் தனது "முஹம்மத் அவர்களும் முஹம்மதியமும்" என்று தலைப்பிட்ட நூலில், இறைதூதர் (ஸல்) அவர்களைப்பற்றியும், அல்-குர்ஆன் வேத நூலைப்பற்றியும் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "சிறிதேனும் எழுதவோ, வாசிக்கவோ தெரியாதிருந்த முஹம்மத் அவர்கள் ஒரு சிறந்த வேதநூலின் ஆசிரியராயுள்ளார். அல்-குர்ஆன், வணக்கங்கள் உட்பட ஒரு வாழ்க்கை வழிகாட்டியாகவும், சமூக வாழ்க்கைச் சட்டக்கோவையாகவும் ஒன்றிணைந்தமைந்த வேதநூலாக உள்ளது. அல்-குர்ஆன் தற்காலத்தில் அகில உலக மக்கள் தொகையின் ஆறில் ஒரு பங்கினரான முஸ்லிம்களால் மஹாத்மியமும், அவசிய அறிவியலும், ஆத்மவியலும் ஒன்றிணைந்தமைந்த மகிமைமிகு வேதநூலாகப் போற்றப்பட்டும், சங்கையாகப் பேணப்பட்டும் வருகின்றது. அந்த நூல், உண்மையாக, ஒரு அற்புதமேயாகும்." எனினும் அவ்வாறு கூறிய சங். போஸ்பேர்த் ஸ்மித் ஒரு முக்கடவுள் வாதியாகவே காலமானார்.

நான்காவதாக, பிரான்ஸ் தேசத்தின் புகழ்மிக்க வரலாற்றாசிரியரான லாமாட்டினெ அவர்கள் தனது "துருக்கியரின் வரலாறு" என்று தலைப்பிட்ட நூலில், இறைதூதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மத் (ஸல்) அவர்கள்பால் மகோன்னத புகழ்மாலைகளை விபரமாக வழங்கியதின் பின், இறுதியில் அவையாவையும் இறுகச்சுருக்கி, பின்வருமாறு கூறுகின்றார். "முஹம்மத் அவர்கள் ஒரு தத்துவஞானி, வாக்குவன்மை மிகுசிறந்த பேச்சாளர், இறைதூதர், சட்டமியற்றுபவர், போர்த்தளகர்த்தர், போதனைகள் சாதனைகளாகவும், (சமூக நலன்களுக்கான) எண்ணங்கள் வெற்றி பெற்று மலர்வதைக் காண்பவர்; உருவமற்ற ஏக இறைவனை மையமாகக்கொண்ட மார்க்கத்தையும், அறிவு பூர்வமான நம்பிக்கைகளையுடைய வேதத்தையும் உத்தாரணஞ் செய்பவர். இருபது நிலப்பிரதேச இராச்சியங்களையும், ஒரேயொரு ஆத்மீக இராட்சியத்தையும் உண்டாக்கியவராகும். மானித மஹாத்மியத்தையும், தராதரத்தையும் அளவிட்டுப் பார்க்கையில், அவரைவிட மேன்மையான மனிதர் வேறெவ ராவது உண்டா? என நாம், வினவவேண்டியுள்ளது."

தனது வினாவின் விடையை அவ்வினாவிலேயே தொக்கிநிற்க வைத்த புகழ்மிக்க வரலாற்றாசிரியர் திரு. லாமாட்டினெ என்பாரும், இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாமலேயே இறுதியில் காலமானார்.

ஐந்தாவதாக, உளவியல் ஆய்வாளரான 'ஜுள்ஸ் மாஸ்மன் என்னும் அமெரிக்கப் பேரறிஞர் 1974 ஜுலை, 15ஆம் திகதிய, உலகப்பிரசித்திபெற்ற "Time" என்னும் வெளியீட்டில், "தலைவர்கள் எங்கே உள்ளனர்" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அவர் அக்கட்டுரையில் வரலாறு கண்ட உலகப்புகழ்மிகு தலைவர்கள் யாவரையும் விபுரமாக ஆராய்ந்த பின்பு, தன் ஆய்வை பின்வருமாறு கூறிமுடிக்கின்றார். "எல்லாக் காலங்களிலும், உலகில் எல்லா சமூகங்களிடையேயும் தோன்றிய சமூகத்தலைவர்கள் அனைவரிலும் முஹம்மத் அவர்களே முதலாவதான அதி சிறந்தவராகும்." என்று கூறிய அவ்வறிஞர், தான் ஒரு யூதராகயிருந்திடினும், தனது மதத்தலைவரான இறைதூதர் மூஸா (அலை) அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தேர்ந்த அட்டவணையில் இரண்டாம் இடத்திலேயே வைக்கின்றார். அவரின் கணிப்புக்கேற்ப, இயேசுநாதர் அவர்களும், புத்தர்பிரான் அவர்களும் குறைவான தராதரங் களைப் பெற்றவர்களாயுள்ளனர். சிக்காக்கோ பல்கலைக்கழக இப் பேராசிரியர் இக்கணிப்புக்குப் பயன்படுத்திய மூல விபரங்களை, "முஹம்மத் அவர்களைப் பற்றி பிபிலிய நூல் கூறுபவை" என்று தலைப்பிட்ட நூலிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஆறாவதாக வானவியலாளரும், எண்ணியலாளரும், வரலாற்றாசிரியருமான பிரபல அமெரிக்கப் பேரறிஞர் மைக்கல் H. ஹாட் அவர்கள், உலக வரலாறு கண்ட சிறந்த சமூகத் தலைவர்கள் யாவரிலும் அதிசிறந்த ஒரு நூறு பேர்களைத் தேர்ந்தெடுத்து "THE HUNDRED" என்னும் தலைப்பில் 572 பக்கங்களைக் கொண்ட ஒரு விஷேட நூலை எழுதி வெளியிட்டிருக்கிறார். அவர் உலக வரலாறு கண்ட சிறந்த தலைவர்கள் யாவரையும் நுணுகி ஆராய்ந்து, அவர்களில் அதிசிறந்த மனித சேவை புரிந்து, உலக மக்களிடையே ஆகக்கூடுதலான செல்வாக்கைப் பெற்றிருப்பவர்களில், அதிசிறந்த ஒரு நூறு பேரைத் தேர்ந்தெடுத்து, மேலும் அவர்களை வரிசைக்கிரமப்படுத்தியுள்ளார். அவர்களை நுணுகி ஆராய்வதற்காக மனித சமூகத்தின் அபிவிருத்திக்காக அளிக்கப்பட்ட சகல துறைப்பங்களிப்பு, மக்களிடையே வகிக்கப்படும் செல்வாக்கு முதலான சிறப்பியல்புகளின் அடிப்படையில் தேர்ந்தெடுத்து, மேலும் அந்த ஒரு நூறு பேரையும் நுணுகி, நுணுகி ஆராய்ந்து வரிசைக்கிரமப் படுத்தியுள்ளார். அந்த வரிசையில், அப்பேரறிஞர், அத்தனை சமூகத்தலைவர்களிலும் இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்களே முதலாவதான உலகத்தலைவர் என்று கூறுகின்றார். தனது சொந்த சமயத் தலைவரான இயேசு கிறிஸ்து அவர்களை அவ்வரிசையில் மூன்றாம் இடத்திலேயே வைக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஜோர்ஜ் பேனாட்ஷோ ஜோன் டேவன் போட், மகாத்மா காந்தி முதலான உலகப்பிரசித்தி பெற்ற பேரறிஞர்கள், புகழ்பெற்ற மாமேதைகள், சமூகத்தலைவர்கள், இறுதி இறைதூதர் (ஸல்) அவர்கள்பால், அளவிலா புகழ்மாலைகளை வழங்கியுள்ளார்கள். உதாரணமாக, மேற்குறிப்பிட்டுள்ள மூவரும் முறையே, "இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள், உலகின் சமயத்தலைவர்கள் யாவரிலும் அதி உன்னத வெற்றியைப்பெற்றவர், அவரைப்போன்ற வேறொருவர் இவ்வுலக இறுதிவரை வரமாட்டார்" என்றும் கூறியுள்ளார்கள். ஆனால், அவ்வாறு புகழ்ந்தேற்றும் பிரபல அறிஞர்கள், அந்த இறைதூதர் போதித்த வாழ்க்கை வழியான இஸ்லாத்தை ஏற்று, அவர்களைப் பின்பற்றி வாழ்வதற்கு முன்வராதிருந்தமைதான் விசித்திரமான வினாவாகும்.

பெருமானார் (ஸல்) அவர்களைப்பற்றி புகழுரைகள் கூறியிருக்கும் பேரறிஞர்களின் வரிசையில் ஆகப்பிந்திய காலத்தவர் மைக்கல் H. ஹாட் என்பவராகும். அவர், "ஆத்மீகத்துறை உலகாதய வாழ்க்கைத்துறை ஆகிய இரு துறைகளிலும் மனித வரலாற்றில் அதி உன்னத அந்தஸ்தும், செல்வாக்கும் உடையவர் நபி முஹம்மத் (ஸல்) அவர்களே" என்று கூறிவிட்டு, தனது சொந்த நம்பிக்கை பற்றிய முடிவை நியாயப்படுத்தவும் முயற்சிக்கின்றார். அதாவது, தான் இஸ்லாத்தைத் தழுவாததற்குரிய தன் அடிமனத்திலுள்ள தனது காரணத்தை வெளிப்படுத்துமாப்போன்று, "முஹம்மத் அவர்கள் அல்லாஹ்விடமிருந்து அருளப்பட்டதென நம்பப்படும் முஸ்லிம் களின் பரிசுத்த வேதநூலான குர்ஆனின் நூலாசிரியராகவு முள்ளார்." என்று அவரின் கூற்றுக்களை முடிக்கிறார். சங். போஸ்வேர்த் ஸ்மித் அவர்களும் அதே மனநோய்க்கு இலக்காகி, "எனினும் முஹம்மத் குர்ஆனின் நூலாசிரியராகவு முள்ளார்" என்று குறிப்பிடுகின்றார். எல்லாம் வல்ல இறைவனும், நிராகரிப்போர்களில் சிலர் அவ்வாறு குற்றம் சாட்டியதாக தன் இறுதிமறையில், "குர்ஆன் வார்த்தைகளைக் குறித்து, இவை மனிதர்களின் வார்த்தைகளே" என்று நிராகரிப்பாளர்கள் கூறுகின்றனர்" என்று குறிப்பிடுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "அல்-குர்ஆன் - 74 : 30"

நிராகரிப்போரின் அல்-குர்ஆன் பற்றிய முற்றும் பிழையான, கற்பனைப் பொய்யான கூற்றுக்கு விடையாக, அவ்வேதநூலின் ஆசிரியனான எல்லாம் வல்ல இறைவன்; "பித்தலாட்டம் புரியும் பொய்யர்களை நாம் விரைவில், நரக நெருப்பில் எறிவோம்." என ஒரு கடும் எச்சரிக்கையை விடுத்ததையடுத்து, அந்தக் குறிப்பிட்ட குர்ஆன் சூறாவை, *"அதன்மேல் பத்தொன்பது இருக்கின்றன."* என்னும் சிறு வாக்கியத்தோடு முடிக்கின்றான் இறைவன். (அல்குர்ஆன் - 74 : 30)

அதாவது, எல்லாம் வல்ல ஏக இறைவன், மனித இனத்தார்க்கு இறுதி வேதமாக அருளிய அல்-குர்ஆனை இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் தானே ஆக்கிக் கொண்டார்கள் என்னும் அப்பட்டமான பொய்யை மன முரண்டாகக் கூறிக்கொண்டிருக்கும் நிராகரிப்பாளர்களுக்கு உரிய தண்டனைகளுடன், மேலதிகமாக பத்தொன்பது விதிக்கப்படும். அவர்கள் பத்தொன்பதோடு கணக்கீடு செய்துகொள்ள வேண்டிவரும். இங்கு "பத்தொன்பது" என்று குறிப்பிடப்படுவது யாது?

எம், சென்ற காலத்தைய பிரபல அல்-குர்ஆன் விளக்க உரையாளர்கள், "பத்தொன்பது" என்று குறிப்பிடப்படும் சொல்லின் பொருள் பற்றி சில அனுமானங்களைக் கொண்டிருந்தனர். சிலர், "பத்தொன்பது எனக் குறிப்பிடப்படுவது, நரகவாதிகளைக் கட்டுப்படுத்தும் வானவர்களின் மேலதிகாரிகளான தலைவர்களின் தொகையைக் குறிப்பதாகும் என்றும்; வேறு சிலர், அத்தொகை மானித மனோசக்திகளின் தொகையைக் குறிப்பதாகும் என்றும்; மற்றும் சிலர் அது இஸ்லாத்தின் கட்டாயக் கடமைகள் யாவற்றின் தொகையைக் குறிக்கின்றது என்றும், கூறியிருக்கிறார்கள். உதாரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாமா அப்துல்லாஹ் யூசுப் அலி அவர்கள், மௌலானா தரிபாடி, முதலானோர்களின் விளக்கவுரைகள் அதை உள்ளடக்கியுள்ளன. ஆனால், ஒவ்வொரு விளக்கவுரையாளரும், தான் கூறுவது தன் அனுமானமேயாகுமெனக் கூறிவிட்டு, அதுபற்றி, எல்லாம் வல்ல அல்லாஹ்வே நன்கு அறிந்தவன் என முடிக்கின்றனர்.

சென்ற 1400 ஆண்டுகளாக முஸ்லிம்கள் மேற்படி (அல்-குர்ஆன் 74 : 30) சிறுவாக்கியத்தின் தாத்பரியமான அந்தரங்கப்பொருளை அறிந்து கொள்ளாதது அதிசயமெனக் கருதப்படலாம். உண்மையிலும் உண்மையாக, அல்-குர்ஆன் இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் வாயிலாக, அருளப்பட்ட எல்லாம் வல்ல இறைவனின் வார்த்தைகளாகும். இறைதூதர் (ஸல்) அவர்களும் அந்த உரிமையையே கோரினார்கள். அல்-குர்ஆனும் அதையே, பின்வரும் வாக்கியங்கள் வாயிலாக நிரூபனஞ் செய்கின்றது.

> *''அவர், (முஹம்மத்) தன் சொந்த விருப்பத்திற்கேற்ப கூறுவதில்லை.''*
>
> *''அவருக்கு வஹிமூலம் அருளப்பட்டதைத் தவிர, வேறெதையும் வேதவாக்கியங்களாக அவர் கூறுவதில்லை.''*
>
> *''அவர், மகத்தான சக்திகளையுடைய ஒருவராக (பிழையாக) கற்பிக்கப்படுகின்றார்.''*
>
> (அல் – குர்ஆன் 53 : 3 – 5)
>
> *''(நபியே!) கூறுவீராக! 'யான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே. எனக்கு எல்லாம் வல்ல ஏக இறைவனின் வஹி அனுப்பப்பட்டுள்ளது, என்று''*
>
> *(அல் – குர்ஆன் 18 : 110)*

வானவர் தலைவர் ஜிப்றயீல் (அலை) அவர்களின் நான்காவது விஜயத்தின்போது, நபி முஹம்மத் (ஸல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு வஹியாக அருளிய அல்-குர்ஆன் 74ஆம் அத்தியாயமான சூறா 'முதஸ்ஸிர்' இன் 30ஆம் வாக்கியமான, ''*அதன் மேல் பத்தொன்பது இருக்கின்றன*'' என்னும் திருவாக்கியத்துடன் நிறுத்தியவர்களாக, அடுத்த விஜயத்தின்போது அவர்களின் முதலாம் விஜயத்தின்போது அருளப்பட்ட 96ஆம் அத்தியாயத்தின் பாக்கியாகவிருந்த வாக்கியங்களை வழங்க ஆரம்பித்தார்கள். 96ஆம் அத்தியாயத்தின் முதல் அருளப்பட்ட 5 வாக்கியங்களுடன், பின்பு 14 வாக்கியங்கள் அருளப்பட்டிற்று. அவ்விஜயங்களின் போதும் அருளப்பட்ட திருவாக்கியங்களின் மொத்தத் தொகை பத்தொன்பது. "அதன் மேல் பத்தொன்பது இருக்கின்றன" என்னும் மேற்படி வஹி இறங்கிய உடனேயே 19 வாக்கியங்களைக் கொண்டு வேறு ஒரு அத்தியாயம் நிறைவு பெறுகின்றது. அதே அத்தியாயத்தின் முதன்முதல் அருளப்பட்ட (96 : 1-5) ஐந்து வாக்கியங்களிலும் மொத்தமாக 19 சொற்கள் உண்டு. அவை போன்ற மேலும் பல ஒத்த நிகழ்ச்சிகள் உண்டு.

பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள், வாக்கு வாய்மையுள்ளவர்களென்பதை, அவர்களின் எதிரிகள் தானும் ஏற்றுக்கொள்கின்றனர். அதன் காரணமாக, அஞ்ஞானிகள் நிறைந்து காணப்பட்ட அக்கால அராபிய சமூகத்தில், முஹம்மத் (ஸல்) அவர்கள், இளமைப் பருவத்திலிருந்தே 'அல்-அமீன்' (நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்) 'அஸ்-ஸாதிக்' (வாக்கைக் காப்பவர்), 'அல்-வாத்' (உண்மையாளர்) என்னும் சிறப்புப் பெயர்களைக் கொண்டு அழைக்கப்பட்டு வந்தார்கள். விந்தையிலும் விந்தையாக, ஆராய்ச்சியாளரெனத் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கும் நிராகரிப்பாளர்கள், அவ்வாறான உண்மையாளர் முஹம்மத் (ஸல்) அவர்கள் தான், அல்-குர்ஆனின் நூலாசிரியர் என்று, விதண்டா வாதம் பண்ணிக்கொண்டிருப்பதே விசித்திரத்திலும் விசித்திரமாயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “அல்-குர்ஆன் - 74 : 30” CONTD.

நிராகரிப்பாளர்களின் நியாயமற்ற குற்றச்சாட்டுக்கேற்ப அல்-குர்ஆனை தானே ஆக்கிக்கொள்வதற்காக எழுத வாசிக்கத் தெரியாத பெருமானார் (ஸல்) அவர்கள், பின்வருமாறாகவும் ஆரம்பத்தில் சொல்லியிருக்க வேண்டும். “எனது நூலின் முதலாவது வாக்கியம் 19 எழுத்துக்களைக் கொண்டதாயிருக்க வேண்டும்” அவ்வாறான ஒரு நிபந்தனையை மனித சக்தியால் நிறைவேற்ற முடியாது. அல்-குர்ஆனை பின்வரும் 19 எழுத்துக்களைக்கொண்ட வாக்கியத்தைக்கொண்டு, அதன் நூலாசிரியன் பின்வருமாறு ஆரம்பிக்கின்றான்.

بسم الله الرحمن الرحيم

(அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு ஆரம்பிக்கின்றேன்.) மேற்படி அரபு வாக்கியத்தில் சரியாக 19 எழுத்துக்கள் உண்டு. (அல்-குர்ஆன் 74 : 30) வாக்கியம் “அதற்குமேல் பத்தொன்பது இருக்கின்றன” என்றும்; உங்கள் பால் பத்தொன்பது விதிக்கப்படும்” என்றும்; “நீங்கள் பத்தொன்பதோடு ஈடுசெய்துகொள்ள வேண்டும்” என்றும், கூறப்பட்டிருப்பவை, பெருமானார் (ஸல்) அவர்களின் நேரான எச்சரிக்கைகளாயிருக்க முடியாதென நிராகரிப்போர்கள் நியாயவாதம் புரிகின்றனர். அத்துடன் அல்-குர்ஆன் எங்கிலும் பத்தொன்பதின் பெருக்குத்தொகைகளிருக்கும் அற்புதத்தை கொம்பியூட்டரின் உதவி கொண்டு அறிந்துகொள்ளக் கூடியதாயிருக்கின்றது. உதாரணமாக اسم ‘பெயர்’ என்று பொருளுடைய அரபுப்பதம் (19 X 1) 19 முறைகள் வருகின்றது. “இறைவன்” என்று பொருளுடைய الله என்னும் அறபுப்பதம் 19 X 142 = 2698 முறைகள் வருவதாயுள்ளது. அவ்வாறான நிகழ்வு பத்தொன்பதை அடிப்படையாகக் கொண்டதாக அல்-குர்ஆன் எங்கிலும் பரந்து ஏற்படுகின்றமை, மனித சக்திக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தியமானதல்லவென்பதை, விடாப்பிடியான நிராகரிப்பாளர்களால் உணர முடிவதில்லை. அல்-குர்ஆனின் பிரபல்யம் வாய்ந்த ஏனைய

الرحمن (அளவற்ற அருளாளன்)

الرحيم (நிகரற்ற அன்புடையோன்)

என்னும் அறபு இணைப்புப் பதங்களும் அல்-குர்ஆனில் நிகழும் முறைகள் பத்தொன்பதின் பெருக்குத் தொகைகளேயாம். மனிதனை பிரமிப்பிலாழ்த்தக்கூடிய இம்மகா அற்புதங்கள், எவ்வகை மகாத்மியமான மனித சக்தியால் தானும், சாதித்திருக்க முடியாது என்பதை அறிவுடைய மனிதர்கள் யாவரும் ஏற்றுக்கொள்வர்.

படிப்பறிவில்லாத பெருமானார் (ஸல்) அவர்கள், நவீன எழுதும் சாதன வசதிகள் இல்லாதிருந்த காலப்பருவத்தில் அவ்வளவு பல்வகை அதிசயங்கள் நிறைந்த அல்-குர்ஆனை தாங்களாகவே ஆக்கியிருக்க முடிந்திருக்காது என உணர்ந்து, தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு, நாங்கள், பெரும் மேதைகளாயிருக்க வேண்டிய அவசியமில்லை.

ஆனால், ஒரு நூல், இறைவனிடமிருந்து வந்ததெனக் கருதப்படுவதற்கு உண்மையான இறைவாக்கியங்களை உள்ளடக்கியதாவெனத் தெளிவாக்கி, அது உரிய நிரூபணச் சான்றுகளைக் கொண்டதாயிருக்க வேண்டியதவசியம். அதி உயர் மன்றத்திலிருந்து வரும் கட்டளைகள், அவ்வுயர் மன்றத்தின் முத்திரை பொறிக்கப்பட்டனவாயிருத்தல் வேண்டும். அம்முத்திரை, எல்லாவித சந்தேகங்களையும், மாறாட்டங்களையும் நீக்கித்தெளிவாக்கக் கூடியதாயிருத்தல் வேண்டும். அவ்வாறான இறைவனின் முத்திரை தான் அல்-குர்ஆனின் 114 அத்தியாயங்களிலும் காணப்படும்.

بسم الله الرحمن الرحيم

(அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு ஆரம்பிக்கின்றேன்.) என்னும் முத்திரை அல்குர்ஆனின் 114 அத்தியாயங்களுக்கும் ஒவ்வொன்றாக 114 முத்திரைகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

STAR OFFSET PRINTERS
SAINTHAMARUTHU
Tel : 067 - 29414

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org